

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (05.06.2025) ரூபாய் 290 கோடி மதிப்பில் திருச்சியில் கட்டப்பட்டு வரும் பெருந்தலைவர் காமராஜர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று முன்தினம் (05.06.2025) சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாணவ, மாணவிகளுக்கு மஞ்சப் பைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா, மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கப் பள்ளி) திருமதி மான்விழி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் உள்ளனர்.



தி.மு.க. பொறியாளர் அணி, வர்த்தகர் அணி, நெசவாளர் அணி, அயலக அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் சென்னை, அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி, தலைவர் துரை கி.சரவணன், கழக வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், கழக நெசவாளர் அணிச் செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் 4 அணிகளின் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கழக ஆட்சியில் 3,000-வது குடமுழுக்கு

# நாகப்பட்டினம் மாவட்டம், திருப்புகலூர், அக்னீஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்பு!

நாகை, ஜூன் 7-

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று முன்தினம் (05.06.2025) நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம், காயாரோகண சுவாமி உடனுறை நீலாய தாட்சியம்மன் திருக்கோயிலில் 2025-2026ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், திருக்கோயில்களில் 27 நட்சத்திரங்களுக்கான மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தொடங்கி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள், இந்த அரசு பொறுப்பேற்ற பின், 3,000வது நடைபெற்ற திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவில் ஆதீன பெருமக்கள் மற்றும் இறையன்பர்களுடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பின்னர், வேதாரண்யம் வட்டம், துளசியா பட்டினத்தில் ரூ.19 கோடி மதிப்பீட்டில் பணிகள் தமிழ் மூதாட்டி அவ்வையாருக்கு மணி மண்டபம் அமைக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்றைய தினம் திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம் பக்தர்கள் தங்கும் விடுதியையும், திருவானைக் காவல், ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில் யானை பராமரிப்பு, திருக்குளம் பராமரிப்பு, பசுமடம், திருநீறு தயாரிக்கும் கூடம் ஆகிய வற்றை ஆய்வு செய்தோம்.

அதனைத் தொடர்ந்து, அந்தநல்லூரில் இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர் அலுவலகக் கட்டடத்தையும், பழூர், காசி விஸ்வநாத சுவாமி திருக்கோயிலில் புதிதாக கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடத்தையும், பிச்சாண்டவர் கோயில், உத்தமர் திருக்கோயிலில் பசுக்கள் காப்பக கட்டடத்தையும், திருப்பைஞ்ஞீலி, ஞீலிவனேஸ்வரர் திருக்கோயிலில் செயல் அலுவலர் அலுவலக கட்டடத்தையும் திறந்து வைத்தோம்.

அதனைத் தொடர்ந்து, சமயபுரம், மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.2 கோடி செலவில் திருக்கோயில் கோபுரங்கள், தங்க விமானம் மற்றும் மதிற்சுவர்களை ஒளிரும் வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பணிகளை தொடங்கி வைத்தோம்.

பின்னர், தஞ்சாவூர் மாவட்டம், திருக்கருக்காவூர், கர்ப்பரட்சாம்பிகை சமேத முல்லைவனநாத சுவாமி திருக்கோயிலில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதிய வெள்ளித்தேர் செய்வதற்கு 408 கிலோ 145 கிராம் வெள்ளிக் கட்டிகளை வழங்கி பணிகளை தொடங்கி வைத்தோம்.

இன்றைய தினம் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம், காயாரோகண சுவாமி உடனுறை நீலாயதாட்சியம்மன் திருக்கோயிலில் 2025-2026ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் 27 நட்சத்திரங்களுக்கான மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தொடங்கி வைத்தோம்.

அதனைத் தொடர்ந்து, இந்த அரசு பொறுப்பேற்ற பின், 3,000 வது குடமுழுக்காக வேளாக்குறிச்சி ஆதீனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருப்புகலூர், அக்னீஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் ரூ. 1.52 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஆதீன பெருமக்கள், இறையன்பர்கள் மற்றும் உபயதாரர்கள் ஒத்துழைப்புடன் இன்று வெகு சிறப்பாக நடைபெற்ற திருக்குடமுழுக்கு விழாவில் பங்கேற்றோம்.

திராவிட முன்னேற்ற கழக ஆட்சி ஆன்மிகத்திற்கு எதிரானது, இந்த ஆட்சி பொறுப்பேற்றால் ஆன்மிக தழைத்தோங்காது என்ற கூற்றையும் அடித்து நொறுக்கிடும் வகையில் முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறைக்கு முழு சுதந்திரத்தை அளித்து பல்வேறு திருப்பணிகள் நடைபெறவும், பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்தி தரவும் உத்தரவிட்டார். அதன் காரணமாகவே இன்றைய தினம் 3,000 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நிறைவு பெற்றுள்ளன. இந்தாண்டு இறுதிக்குள் 3,500 திருக்கோயில்களின் குடமுழுக்கை எட்டுவோம்.

தமிழ் மூதாட்டி அவ்வையாருக்கு மணி மண்டம் அமைக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதை தொடர்ந்து, வேதாரண்யம் வட்டம், துளசியா பட்டினத்தில் ரூ.19 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அந்த பணிகளையும் இன்றைய தினம் ஆய்வு செய்தோம். இந்த அரசு திருவள்ளுவர், சேக்கிழார், அவ்வையார் போன்ற சான்றோர் பெருமக்களுக்கும், சித்தர்களுக்கும் புகழ் சேர்க்கின்ற வகையில் விழாக்களை நடத்துவதோடு மணி மண்டபங்களையும் சீரமைத்து பெருமை சேர்க்கின்றது. இப்பணிகளால் இறையன்பர்களிடமிருந்து கிடைக்கும் பாராட்டுக்கள் இந்து சமய அறநிலையத்துறையை மென்மேலும் சிறப்பாக செயலாற்ற தூண்டுகோலாக அமைந்துள்ளன.

**பழமையான திருக்கோயில்களின் திருப்பணி!**

1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான திருக்கோயில்களின் திருப்பணிக்கு இதுவரை ரூ.425 கோடி அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் 54 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நிறைவு பெற்றுள்ளது.

மேலும், ஆண்டுதோறும் வழங்கி வந்த திருக்கோயில்கள் பராமரிப்பு நிதி, ஒரு கால பூஜைத் திட்ட திருக்கோயில்களின் வைப்பு நிதி, கிராமபுற மற்றும் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் திருக்கோயில் திருப்பணி நிதி, ரோப்கார் அமைக்க நிதியுதவி என அரசு மானியமாக ரூ.1,008 கோடி வழங்கப்பட்டுள்ளது. இவ்வளவு பெரும் தொகை அரசு மானியமாக எந்த ஒரு ஆட்சியிலும் இந்து சமய அறநிலையத்துறைக்கு வழங்கப்படவில்லை. கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்பதை போல் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்கள் மேலும் தேவையான நிதி தருவதற்கு தயாராக உள்ளார்.

கிராமப்புற மற்றும் ஆதி திராவிடர் மக்கள் வசிக்கும் பகுதி திருக்கோயில்களின் திருப்பணிக்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.1 லட்சத்தை ரூ.2.50 இலட்சமாக உயர்த்தி நான்காண்டுகளில் 10 ஆயிரம் திருக்கோயில்களுக்கு ரூ.212.50 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. ஒருசிலர் திருக்கோயில்களை ஆயுதமாக கையில் எடுத்து அரசியல் செய்ய நினைக்கின்ற னர்.

இந்த ஆட்சியின் செயல்பாடுகள் அதனை கூர் மழுங்க செய்துவிட்டன. இறையன்பர்கள் இந்த ஆட்சியை போல் எந்த ஆட்சியிலும் திருப்பணிகளும், பக்தர்களுக்கான வசதிகளும் செய்யப்படவில்லை என்பதை தெரிவித்து முதலமைச்சர் அவர்களை பாராட்டுகின்றனர் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் பி.ஆகாஷ், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், சட்டமன்ற உறுப்பினர் முகமது ஷானவாஸ், நாகப்பட்டினம் நகர்மன்றத் தலைவர் இரா.மாரிமுத்து, மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் நாகரெத்தினம் மண்டல இணை ஆணையர் வி.குமரேசன், துணை ஆணையர் திருமதி பி.ராணி, உதவி ஆணையர் எஸ். இராஜாஇளம்பெருவழுதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம், காரிமங்கலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் வழக்கறிஞர் எம்விடி.கோபால் தலைமையில் ஜிட்டாண்ட அள்ளியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஏழை எளியோருக்கு இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாநில விவசாய அணி துணை செயலாளர் சூடப்பட்டி சுப்பிரமணி,முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் எம்விடி.யுவராஜ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஹரி பிரசாத், சக்தி, பாக்கியராஜ், ராமமூர்த்தி ராஜா, கணேசன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.




தி.மு.கழக சிறுபான்மையினர் நலஉரிமைப்பிரிவு சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு, அணியின் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் (தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர்) தலைமையில், மயிலாப்பூர் இராமகிருஷ்ணா மிஷன் மாணவர்கள் இல்லத்தில் மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில், அணி நிர்வாகிகள் ஜெரால்ட், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, அடையாறு சபீல்கான், கா.ரபிஅகமது மற்றும் தென்மேற்கு மாவட்ட அமைப்பாளர் ஜெகன்ராஜ், ஷேக் முகமது, பாஷா, எஸ்.கே.நசீர், உத்திரியம், இப்பராக்கிம்கனி, தீபன், என்.அப்துல்ரகுமான், அலெக்ஸ், சமீம், ஜான் என்கிற அப்பாராவ், நசீம் உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### நீதித்துறையின் மாண்பையும், சீரிய மரபையும் காத்து வந்தவர்!

# நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் மறைவு - சமூக நீதிக் கருத்தியல் தளத்தில் இயங்கும் அனைவருக்கும் பேரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, ஜூன் 7-**

**ஓய்வு பெற்ற நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில், "நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்களின் மறைவு, சமூக நீதிக் கருத்தியல் தளத்தில் இயங்கும் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

ஓய்வு பெற்ற நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் உளம் வருந்தினேன்.

நீதித்துறையின் மாண்பையும், சீரிய மரபையும் காத்துவந்தவர் என்பதுடன், முத்தமிழறிஞர்



தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது அருந்ததியருக்கு 3 விழுக்காடு உள்ஒதுக்கீடு கொண்டுவருவதற்கான பரிந்துரையை அளித்த குழுவின் தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவராக இருந்த போது, பிற்படுத்தப்பட்டோருக்கான தமிழ்நாடு அரசின் இடஒதுக்கீட்டை உறுதி செய்வதற்கான அறிக்கையினையும் தயாரித்து அளித்தவர் ஆவார்.

நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்களின் மறைவு நீதித்துறைக்கு மட்டுமின்றி சமூகநீதிக் கருத்தியல் தளத்தில் இயங்கும் அனைவருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் நீதித்துறை சார்ந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

## சூரிய சக்தி நிறுவல் பயிற்சி!

சென்னை, ஜூன் 7–

3 நாட்கள் – தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் சூரிய சக்தி நிறுவல் பயிற்சி, தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 3 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் சூரிய சக்தி நிறுவல் பயிற்சி வரும் 18.06.2025 முதல் 20.06.2025 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் சூரிய சக்தி துறையில் தொழில்முனைவோரின் அடிப்படைகள், சூரிய சக்தி துறையில் தொழில் முனைவோரின் அடிப்படைகள், சூரிய சக்தி மென்பொருள் கண்ணோட்டம், சூரிய சக்தி அடிப்படைகள் அறிமுகம், அடிப்படை சூரிய சக்தி திட்ட வடிவமைப்பு, நிதி திட்டமிடல், ஒழுங்குமுறைகள் மற்றும் மானியத் திட்டங்கள், சூரிய வணிக மேம்பாடு, AMC & விற்பனைக்குப் பிந்தைய சேவைகள், வணிக விளம்பரப் பயிற்சி, சூரிய PVக்கான வணிக மாதிரிகளைப் புரிந்து கொள்வது, நிதி திட்டமிடல் போன்றவை வழிமுறைகள் ஆகியன கற்றுத்தரப்படும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விளக்கப்படும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியில் பங்குபெறும் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.


தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை – 600 032. 8668102600.

முன்பதிவு அவசியம்:

அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திராவிட மணி
### ஜூன் 7 (2001)



**கருநாடக மாநிலத்தில் கழகத்தை வளர்த்த தளகர்த்தர். கருநாடக மாநில அமைப்பாளராகவும், கழக சட்டமன்ற உறுப்பினராகவும், பெங்களூர் மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.**

**1960ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் ஆணையாளராக நின்று நடத்திய கழகத் தேர்தலில் கருநாடக மாநில அமைப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பு பெற்றவர். தொடர்ந்து கழக வளர்ச்சிக்காக திறம்பட பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. முப்பெரும்விழாவில் இவருக்கு 'கலைஞர் விருது' வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**